16.10.2025

O.S.No.183/2022

PW1 – செல்வராஜ் குமார், த/பெ.கப்பல் ராஜ்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.10.2025.

<u>குறுக்கு விசாரணை :</u> (1, 2 பிரதிவாதிகள் தரப்பில்)

1. என்னுடைய தாத்தா பெயர் என்ன என்றால் செல்வரத்தினசாமி.

2. செல்வரத்தினசாமிக்கு பழனிச்சாமி என்ற சகோதரர் உள்ளார் என்றால் சரிதான்.

3. செல்வரத்தினசாமியின் தகப்பனார் பெயர் சாமி என்ற நாடார் என்ற கப்பல் என்றால் சரிதான்.

4. எனது பாட்டனார் கப்பல் என்பவருக்கு மலையராமன், மேகலிங்கம், பொன்னுச்சாமி மற்றும் சண்முகம் ஆகியோர் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான்.

5. மேற்படி மலையராமன் மகன்தான் 1ம் பிரதிவாதி அய்யாத்துரை என்றால் சரிதான்.

6. என் சொத்திற்கு வடக்கு பக்கம் தபால்காரர் நாகரத்தினம் சொத்து உள்ளது என்றால் சரிதான். நாகரத்தினத்தின் தகப்பனார் பெயர் சண்முக நாடார் என்றால் சரிதான்.

7. மேற்படி சண்முக நாடாருக்கு 18 செண்ட் பாகம் ஒதுக்கப்பட்டது

என்றால் சரிதான்.

8. என் தாத்தா கப்பலுக்கும் 18 செண்ட் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

9. எங்களுக்கு ஒதுக்கப்பட்ட 18 செண்டை பழனிச்சாமி என்பவர் 9 ¼ செண்ட் என் தகப்பார் வழியில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றும் பழனிச்சாமிக்கு என் தகப்பனார் வழியில் 9 ¼ செண்ட் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அதற்கான பத்திரம்தான் என்னிடம் காட்டப்படுவது என்றும் சொன்னால் சரிதான். மேற்படி பத்திரம் பி.சா–ஆ 1 ஆக வா.சா.1 குறுக்கு விசாரைணையில் குறியீடு செய்யப்படுகிறது.

10. அந்த பழனிச்சாமியிடம் இருந்துதான் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

11. என் பாட்டன் கப்பலுக்கு ஒதுக்கப்பட்டதற்கு தெற்கு பக்கம் மலையராமனுக்கு சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மலையராமனுக்கும் 18 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

12. மலையராமனுக்கு எத்தனை மகன்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

13. மலையராமன் அவரது மகன் 1ம் பிரதிவாதிக்கு 18 செண்டை

பொறுத்து ஒரு உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான்.

14. மலையராமன் சொத்திற்கு தெற்கு பக்கம் மேகலிங்கத்திற்கு பாத்தியப்பட்ட 18 செண்ட் பாக இடம் உள்ளது என்றால் சரிதான்.

15. என் வீட்டிற்கு கிழக்கு பக்கம் பொன்னுச்சாமிக்கு 18 செண்ட் பாக இடம் ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

16. என் தாத்தாவிற்கு மொத்தம் 4 ஆண் மகன்கள் ராமரத்தினசாமி, ராமலிங்கம், என் அப்பா கப்பல்ராஜ் மற்றும் ராமபுத்திரன் ஆகியோர்கள் என்றால் சரிதான்.

17. என் வீட்டிற்கு கீழ்பக்கம் என் பெரியப்பா ராமரத்தினசாமியின் சொத்து உள்ளது என்றால் சரிதான்.

18. ராமரத்தினசாமி என்பவர் அவர் சொத்தை கடந்த 29.09.2009 ல் ஸ்ரீராம் சிட்டி யூனியன் வங்கியில் அடமான கடன் வாங்கிய விவரம் என்னிடம் காட்டப்படும் வில்லங் சான்றிதழில் துலங்கும் என்றால் சரிதான். மேற்படி வில்லங்க சான்றிதழ் பி.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஆவணமானது 3 ¼ செண்ட் இடத்தை பொறுத்து என்றால் சரிதான்.

19. என் தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்ட கப்பல்ராஜ்க்கு ஒதுக்கப்பட்ட 18 செண்ட்டில் அனைத்து வில்லங்கங்களும் போக 5.5 செண்ட் மட்டுமே எங்கள் குடும்ப வகையறா வசம் உள்ளது என்றால் சரியல்ல.

20. ரோட்டிலிருந்து மேற்கு பக்கம் எங்கள் பாக இடம் வழியாக கிழக்கே

உள்ள எங்கள் பெரியப்பா இடத்திற்கு செல்வதற்கு 5 லிங்ஸ் அகலம் உள்ள பாதை இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

21. என் சொத்தின் கிழமேல் அளவு எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது.

22. புல வரைபடத்தின்படி என் பெரியப்பா ஒதுக்கப்பட்ட இடத்தை கழித்து பார்த்தால் என் இடத்திற்கு கிழமேல் நீளம் 29 மீட்டர் வரும் என்றால் சரியல்ல.

23. வா.சா.ஆ 3ன் படி என் இடத்திற்கு வடபக்கம் 5 லிங்ஸ் அகலமுள்ள பாதை உள்ளது என குறிப்பிட்டுதான் என் அப்பா எனக்கு ஏற்பாட்டு ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான்.

24. 5 லிங்ஸ் என்பது 1 மீட்டர் அளவு கணக்கு என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

25. அதன் அடிப்படையில் என் இடத்தின் வடபக்கம் உள்ள பாதையானது ¾ செண்ட் இருக்கும் என்றால் இல்லை ½ செண்ட் இருக்கும்.

26. அவ்வாறு பாதையை கழித்து பார்த்தால் எனக்கு ஸ்தலத்தில் 4 ½ செண்ட் மட்டுமே இருக்கும் என்றால் சரியல்ல. பாதையே என் இடத்தில் வராது.

27. வா.சா–ஆ 3 ஆவணத்தின்படி 10 செண்ட்டில் ½ செண்ட் பாதை

கழித்துதான் ஏற்பாட்டு ஆவணம் 9 ½ செண்ட்டுக்கு எழுதப்பட்டது என்றால் சரிதான்.

28. புல வரைபட அமைப்புபடி என் சொத்து 9.3 செண்ட் அளவு மட்டுமே உள்ளது என்றும் மேற்படி அளவுகளுக்கு விரோதமாக நான் உரிமை கோரி வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல.

29. பிரதிவாதிகளின் வீடு கீழ்பாதி வீடாகவும் மேல்பாதி கடை கட்டிடமாகவும் உள்ளது என்றால் சரிதான்.

30. நான் சிறுவயதாக இருக்கும்போதே பிரதிவாதிகள் வீடு கட்டினார்கள் என்றால் சரிதான். அப்போது எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் 7 வயது இருக்கும். அப்போது என் பெரியப்பாவின் விறகு கடை கட்டிடமும் இருந்தது. எனவே என் வழக்கானது காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

31. என் பெரியப்பாவின் விறகு கடை அமைப்பானது ஓட்டுக்கடையாக இருந்தது என்றால் சரிதான். அந்த ஓட்டின் சாய்வானது தென்பக்கம் உள்ள 2ம் பிரதிவாதி சுவற்றில் கொண்டி போட்டு முடிக்கப்பட்டது என்றால் சரிதான்.

32. என் பெரியப்பாவும் 1ம் பிரதிவாதியும் 2ம் பிரதிவாதி வீட்டின் சுவற்றை பொது சுவறாக அனுபவம் செய்து வந்ததால்தான் என் பெரியப்பா கடை ஓட்டின் கொண்டி போட அனுமதி அளித்தார் என்றால் என் பெரியப்பாவின் அறியாமையை ஏற்படுத்தி ஏமாற்றி விட்டனர்.

33. 1ம் பிரதிவாதி வீட்டுசுவறானது தெற்கு பக்கம் நேர்கோடாக செல்லாமல் சாய்வாக சென்று மேற்கு பக்கம் திரும்புகிறது என்றால் சரிதான். அந்த சாய்வான பகுதி 1 அடி இருக்கும் என்றால் சரிதான்.

34. என் சாட்சியத்தின் அடிப்படையில் பார்த்தால் 1ம் பிரதிவாதி என் சொத்தில் எந்த ஆக்கிரமிப்பு செய்யாததால் நான் தாக்கல் செய்துளள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

35. என் பரிகாரம் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.